# பட்ட மேற்படிப்பு நிறுவனத்தில் தேசிய கருத்தரங்கம்



புதுச்சேரி, மார்ச் 16: புதுச்சேரி காஞ்சி மாமுனிவர் பட்டமேற்படிப்பு மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தில் உள் தர உறுதி பிரிவு (ஐகியூஏசி) மற்றும் நிறுவனத்தின் புதுமை கவுன்சில் (ஐஐசி) சார்பில் ருசா நிதியுதவி உடன் அணு மற்றும் பிளாஸ்மா இயற்பியலில் சமீபத்திய முன்னேற்றங்கள் குறித்த தேசிய கருத்தரங்கம் நடந்தது. இக்கருத்தரங்கை நிறுவனத்தின் இயக்குநர் சசிகாந்த தாஸ் தொடங்கி வைத்தார். இயற்பியல் துறை தலைவர் இளங்கோவன் வரவேற்றார். புதுச்சேரி பல்கலைக்கழகத்தின் இயற்பியல் பேராசிரியர் சுரஜ்குமார் சின்ஹா பங்கேற்று பிளாஸ்மா மெட்டல் சந்திப்பு அதிவேக செயலாக்கத்திற்கான ஒரு புதிய அடிப்படை கருவி" என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார். கிளஸ்டர் கதிரியக்க இயக்கவியல் என்ற தலைப்பில் டாக்டர் பீர் பிக்ரம் சிங் பேசினார்.

இதில் ஆசிரியர்கள், ஆராய்ச்சி அறிஞர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டு விவாதங்களில் ஈடுபட்டனர். விழாவின் நிறைவு நிகழ்ச்சியில், முன்-இன்க்யூபேஷன் மைய் திட்டத்தின் ஒரு பகுதியாக மாணவர்கள் முன்வைத்த புதுமையான யோசனைகள் மதிப்பாய்வு செய்யப்பட்டன. சிறந்த காட்சிப்படுத்தல் தேர்ந்தெடுக்கப்பட்டு பரிசளிக்கப்பட்டது. பேராசிரியர் பெரியாண்டி நன்றி கூறினார்.

Dinakaran/16/03/26/page No-16